DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET.

**SC No.: 239/2009**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | Pw14 |
| Name | : | காதர்மீரான் சாஹிப் |
| Father's / Husband's Name | : | முஹம்மது முஹைதீன் |
| Age | : | 63 |
| Religion | : | முஸ்லிம் |
| Calling | : | பணி ஓய்வு |
| Caste | : | லெப்பை |
| Village | : | தூத்துக்குடி |
| Date | : | 08.01.2019. |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

முதல் விசாரணை:

நான் 2014 ஆம் ஆண்டு கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணியிலிருந்து ஓய்வு பெற்றேன். கடந்த 24.12.1999 ஆம் தேதி சிறப்பு விழிப்புக் குழு பதிவு துறையில் காவல் ஆய்வாளராக பணியிலிருந்தபோது இரகசிய மனு சம்மந்தமாக விசாரிப்பதற்காக வாலாஜா சார் பதிவாளர் அலுவலகத்திற்கு ஆய்வு செய்தபோது அங்கு நிலுவையில் உள்ள ஆவணங்களின் போலி முத்திரை தாள்கள் ஏதேனும் உபயோகப்படுத்தப்பட்டுள்ளதா என்று ஆய்வு செய்தேன். ஆவணத்தை ஆய்வு செய்ததில் நிலுவை ஆவணம் எண் 360/1999 பார்வையிட்ட போது அதில் 5000 ரூபாய் மதிப்புள்ள முத்திரை தாள்கள் நிறம் வித்யாசமாகவும், நீர் கோடுகள் தெளிவற்ற நிலையிலும், தாள்கள் மோசமான நிலையிலும் இருந்ததை பார்த்தேன். அந்த ஆவணங்களை பெற்று சென்னை சி.பி.சி.ஐ.டி அலுவலகத்தில் உள்ள கவுன்டர் ஃபீட் பிரிவின் ஆய்வாளர் சங்கர் அவர்களிடம் ஒப்படைத்து அல்டரா வைரஸ் கருவி மூலம் பார்த்தபோது எஸ்.எஸ். குமார் ஸ்ரீபெரும்பத்தூர் என்பவரால் விற்கப்பட்ட 5000 ரூபாய் மதிப்புள்ள முத்திரை தாள்கள் போலியானவை என்று தெரிந்ததன் பேரில் தனியறிக்கை தயார் செய்தேன். 27.12.1999 ஆம் தேதி அதிகாரிகளுக்கு அனுப்பி நடவடிக்கை எடுக்க என்னுடைய தனியறிக்கையை சமர்ப்பித்து கேட்டுக்கொண்டேன். அந்த தனியறிக்கை **அ.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான் நான் கைப்பற்றிய போலி முத்திரை தாள்கள் அவை

ஏற்கனவே அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கு சம்மந்தமாக சி.பி.சி.ஐ.டி. போலிஸார் விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

நான் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு அயல் பணியாக அனுப்பப்பட்டேன். ஆவணங்களை ஆய்வு செய்வதற்கு எங்களுக்கு எந்த தனிப்பட்ட பயறிச்சியும் கொடுக்கவில்லை ஆனால் போலியும் அசலையும் கண்டறிவதற்கான நுணுக்கங்களை சொல்லிக் கொடுத்துள்ளார்கள். எதன் அடிப்படையில் வாலாஜா சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வந்து ஆய்வு செய்தீர்கள் என்றால் அது இரகசியமாக வைக்கப்பட வேண்டியதால் அதை நாங்கள் வெளியிட முடியாது. ஆஜர் எதிரியை பார்த்ததில்லை. ஆய்வு செய்யும்போது பல ஆவணங்களை பார்த்தேன் அதில் ஒரு சில முத்திரை தாள்கள் வித்யாசமாக இருந்ததால் அதை ஆய்வுக்கு அனுப்பிவைத்தேன். நீர் கோடுகள் ஒவ்வொரு ஆண்டும் மாற்றுவார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட முத்திரை தாள்கள் 18-ஆம் தேதி சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் இருக்கலாம். நான் 24-ஆம் தேதி ஆய்வு செய்தேன். மேல் அதிகாரிகள் பணித்திருந்தால் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்திருப்பீர்கள் என்றும் வேண்டும் என்றே ஆய்வுக்கு வந்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. சங்கர் என்பவரிடம் அந்த முத்திரை தாள்களை எடுத்து சென்று அல்டரா வைலட் ஆய்வு செய்தேன். சார் பதிவாளரிடம் அனுமதிப்பெற்றுதான் அந்த ஆய்வுக்கு முத்திரை தாள்களை எடுத்து உட்படுத்தினேன். அதை நிரூபிக்க எந்தவித ஆவணமும் இல்லை. சார்பதிவாளரிடம் எந்த ஆவணமும் வாங்கவில்லை என்றும் வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணம் கைப்பற்றியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET.

**SC No.: 239/2009**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | Pw15 |
| Name | : | ஜனார்தனன் |
| Father's / Husband's Name | : | பால்ராஜ் |
| Age | : | 48 |
| Religion | : | இந்து |
| Calling | : | சார்பதிவாளர், செய்யார் |
| Caste | : | எஸ்.சி. |
| Village | : | கீழ் ஒட்டிவாக்கம் |
| Date | : | 08.01.2019. |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

முதல் விசாரணை:

நான் தற்போது செய்யார் சார் பதிவாளர் அலுவலகத்தில் சார் பதிவளாராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு 1998 முதல் 2000 வரை அரக்கோணம் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்த காலத்தில் அரக்கோணம் பதிவு எல்லைக்கு உட்பட்ட வாலாஜா சார்பதிவாளர் அலுவலகத்தில் இரண்டு ரூ.5000 மதிப்புள்ள போலி முத்திரை தாள்கள் கண்டறியப்பட்டு பதிவுத்துறை தலைவர் அவர்கள் கடிதம் மூலமாக நடவடிக்கை எடுக்ககோரி அரக்கோணம் மாவட்ட பதிவாளர் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. அதன் படி வழக்கு பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் கடிதம் அ.சா.ஆ.2 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

நான் உதவியாளராக பணி செய்தபோது இந்த வழக்கு சம்மந்தப்பட்ட கோப்பு என்னுடைய பொறுப்பில் இருந்தது. நான் மாவட்ட பதிவாளரிடம் அனுமதிப்பெற்று சி.பி.சி.ஐ.டி போலிஸாரிடம் இந்த வழக்கு கோப்பினை கொடுத்தேன். சி.பி.சி.ஐ.டி போலிஸாரிடம் இரண்டு ரூ.5000 மதிப்புள்ள முத்திரை தாள்கள் ஒப்படைத்தேன் என்றால் சரிதான்.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET.

**SC No.: 239/2009**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | Pw16 |
| Name | : | சங்கர் |
| Father's / Husband's Name | : | கண்ணன் |
| Age | : | 60 |
| Religion | : | இந்து |
| Calling | : | கூலி |
| Caste | : | அகமுடைய முதலியார் |
| Village | : | வேலூர் |
| Date | : | 08.01.2019. |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

முதல் விசாரணை:

நான் தற்போது நெ. 26/4, பெரியார் தெரு, சின்ன சங்கரன் பாளையம், வேலூர் என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது டைல்ஸ் லோடு இரக்கும் கூலி தொழிலாளியாக உள்ளேன். இதற்கு முன்பு ரிக்ஷா ஓட்டும் தொழில் செய்து வந்தேன். 2001 ஆம் ஆண்டு 11 மாதம் ஒரு நாள் நானும் என்னுடைய நண்பர் கந்தசாமி என்பவரும் வானியம்பாடி பஸ் ஸ்டான்டிற்கு மாலை 5 மணிக்கு சென்றோம். போலிஸார் என்னிடம் போலி முத்திரை தாள்கள் கைப்பற்றியுள்ளோம் அது சம்மந்தமாக கையெழுத்து போடும்படி கேட்டார்கள் நான் கையெழுத்து போட்டேன். ஒரு கடற்கறை வேலு என்பவர் தன்னிச்சையாக கொடுத்த வாக்குமூலத்தில் சாட்சியாக நான் கையெழுத்துப் போட்டேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது. அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. என்னுடன் கந்தசாமி என்பவரும் கையெழுத்து போட்டார். என்னை சி.பி.சி.ஐ.டி போலிஸார் விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

நான் தற்போது வேலூரில் சங்கரன் பாளையத்தில் உள்ளேன். நானும் என்னுடன் கந்தசாமியும் வானியம்பாடி பஸ் ஸ்டான்டில் இருக்கும்போதுதான் நான் கையெழுத்து போட்டேன். நான் ரிக்ஷா வாங்குவதற்காக வானியம்பாடி பஸ் ஸ்டான்ட் சென்றேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. வானியம்பாடி பேருந்து நிலையத்தில்

கடற்கரை வேலு என்பவரின் பெயரை போலிஸார் சொல்லிதான் தெரியும். நான் வேலூரில் பல வருடமாக உள்ளேன். என்னிடம் வானியம்பாடியில் வைத்துதான் கையெழுத்து வாங்கினார்கள். என்னை வானியம்பாடியில் வைத்துதான் விசாரித்தார்கள். போலிஸார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள், அதில் என்ன எழுதியிருந்து என்ற எனக்கு தெரியாது. எனக்கு படிக்க தெரியாது அதனால் அதில் என்ன எழுதியிருந்து என்று எனக்கு தெரியாது. போலிஸார் வானியம்பாடி சேர்ந்தவர்களிடம் கையெழுத்து வாங்கினார்களா என்றால் எனக்கு தெரியாது. நீங்கள் தற்போது வேலூரில் இருக்கின்றீர்கள் என்றும் சி.பி.சி.ஐ.டி போலிஸார் வேலூரில் உள்ளார்கள் என்றும் அதனால் நீங்கள் வானியம்பாடியில் வைத்து கையெழுத்து போடவில்லை என்று சொன்னால் சரியல்ல.